**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 158/2018**

Prosecution witness : 2

| | | | |
|---|---|---|---|
| Name: | நல்லு | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 26.02.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம் பெரியகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 10.03.2017ம் வருடம் அவணியாபுரம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் பகல் 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.அழகுமுத்து என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சார்பு ஆய்வாளர் பார்ட்டி சகிதம் ராஜமான்நகர் கண்மாய் கரை பகுதியில் ரோந்து செய்தபோது மணிகண்டன் என்ற பங்குமணி , த/பெ.மோகன்ராஜ்,போஸ்ட்ஆபீஸ்தெரு, இந்திரா நகர், சிந்தாமணி, மதுரை என்பவரை கஞ்சாவுடன் கைது செய்து உரிய ஆவணங்கள் சகிதம் எதிரி மற்றும் சொத்துக்களுடன் 13.15 மணிக்கு அவணியாபுரம் காவல்நிலையம் வந்து அவணியாபுரம் காவல்நிலைய குற்ற எண். 320/17, ச/பி. 8(c) r/w 20(b)(ii)(B)NDPS ACTன் கீழ் வழக்கு பதிவு செய்து என்னுடைய புலன் விசாரணைக்கு வழக்கு கோப்பை ஒப்புவித்தார். வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நான் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான சார்பு ஆய்வாளர்-அழகுமுத்து, தலைமை காவலர்-பவுன்ராஜ், கண்ணன் ஆகியோர்களை விசாரணை

செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சார்பு ஆய்வாளரால் அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களான 100கிராம் எடையுள்ள மாதிரி கஞ்சா, 1150கிராம் எடையுள்ள கைப்பற்றிய கஞ்சா ஆகியவற்றையும் மற்றும் பணம் ரூ.5200/-ஐயும் படிவம்-91 மூலமாக நீதிமன்றத்திற்கு எதிரியுடன் அனுப்பி வைத்தேன். 24.04.2017ம் தேதி இந்த வழகககு சொத்துககளுக்கு RPR/No.203/17ன் படி பெற்று அன்றே வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். 29.05.2017ம் தேதி பகுப்பாய்வறிக்கை கிடைக்க பெற்று இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மாதிரியில் கெனபினாய்டுகள் இருப்பது கண்டறியப்பட்டதாக விசாரணையில் தெரிவித்ததால் பகுப்பாய்வினர் திருமதி.ஹமீதாபேகம் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B)NDPS ACTன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் கைப்பற்றிய கஞ்சாவை அவணியாபுரம் காவல் ஆய்வாளர் அவர்கள் மூலம் பிரிவு52(ஏ)ன் கீழ் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க நீதித்துறை நடுவர் எண்-III அவர்கள் மூலம் மீதம் உள்ள கஞ்சாவை அழிப்பு செய்யப்பட்டுள்ளது. படிவம் -91 அ.சா.ஆ. 4 ஆகும். காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.5 ஆகும். கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்ய வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.6 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். மீதம் உள்ள கஞ்சாவை பிரிவு-52 (ஏ)ன் படி நீதித்துறை நடுவர் எண்-III அவர்கள் மூலம் விசாரணை நீதிமன்றத்தால் கஞ்சாவை அழிப்பதற்கு உத்தரவிடப்பட்டது அந்த உத்தரவு அ.சா.ஆ.8 ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா சா.பொ. 1 ஆகும்.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர்.  சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த  நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும்  அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

மாவட்ட மற்றும்  அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.